தனிப்பிரதி - ரூ. 20/-   ஆண்டு சந்தா- ரூ. 200/-

முத்தமிழ் நேசன்

ஜூன் 2022   மலர் 1 இதழ் 5   இனிக்கும் இலக்கிய இதழ்

கலைஞரின் திரைத்தமிழ்

- கவிப்பேரரசு வைரமுத்து

நடிகை ரேகா சிறப்பு கவிதை

மதங்களைக் கடந்து...

தாழையாரின் சிறப்புச் சிறுகதை.

ஹை... ஹைக்கூ...

1. ஏரி நீரில்
அழகாய் மிதக்கிறது
வானவில்

2. ஆற்றங்கரை மரங்கள்
நீரில் ஆடுகின்றன
மீன்கள்

3. வளர்ந்த நெற்பயிர்
பசுமையாய் இருக்கிறது
இயற்கை விவசாயம்

4. அதிக மகசூல்
விவசாயி மகிழ்ச்சி
வியர்வையின் பலன்

5. உழைக்கும் உழவன்
உயர்ந்து நிற்கிறான்
உழவர் சந்தை விற்பனை

6. அறுவடை வயல்
தண்ணீரில் மூழ்கின
நிவாரணம் அறிவுப்பு

7. பெரும் மழை
செட்டைக்குள் குஞ்சுகள்
தாயின் அரவணைப்பு

8. அடர்ந்தக் காட்டில்
அலைந்து திரிகிறது யானைக்குட்டி
பாதையில் கட்டிடம்

9. துரத்தும் புலி
வேகமாக ஓடும் மான்
துப்பாக்கியுடன் காட்டிலக்கா அதிகாரி

10. வேகம் மிகுதியில்
கூடுகிறது உயிர் பயம்
பேருந்து பயணம்

11 விடியலில் மழை
பாத்திரத்தில் நிரம்புகிறது
சொட்டு சொட்டாய் ஓசை

12. மிகவும் அழகாக இருக்கிறது
கைம்பெண் நெற்றியில்
திலகம்

-முனைவர் தாழை **இரா.உதயநேசன்**

முத்தமிழ் நேசன்

இனிக்கும் இலக்கிய இதழ்

ஜூன் 2022 மலர் 1 இதழ் 5

நிறுவனர்

தாழை இரா.உதயநேசன்

ஆசிரியர்

த.அமுதா

ஆசிரியர் குழு

முனைவர்.ஜோ.சம்பத்குமார்

கவிஞர் செ.வீரமணி

த.ஓவியா

வடிவமைப்பு

ம.சேவியர்

அச்சு

M.S ஆப்செட் ராயப்பேட்டை

அலுவலக முகவரி

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு, ஸ்ரீராமபுரம்

ஆம்பூர் – 635 802

திருப்பத்தூர் மாவட்டம்

தலையங்கம்

நம்பிக்கை நாயகி

நடிகை நயன்தாராவுக்கும் இயக்குநர் விக்னேஷ் சிவனுக்கும் அண்மையில் நடந்த திருமணம், தமிழகத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. ரசிகர்கள் வாழ்த்தி மகிழ, திரையுலகமே திரண்டு சென்று அவர்களை வாழ்த்தியிருக்கிறது. ஆனால் சனாதன இருட்டில் இருந்து இன்னும் மேலே ஏறிவராத சிலர் மட்டும் ”இது சரியா? ஏற்கனவே சிலரோடு காதல் செய்த நடிகை, இப்போது ஊரைக்கூட்டிக் கல்யாணம் செய்துகொள்ளலாமா?” என்று வெறும் வாயை இன்னும் மெல்லுகிறார்கள்.

ஏற்கனவே நயன் கொண்ட காதல் எல்லாம் தோற்றதற்கு அவர் மட்டும்தான் காரணமா? அவருடன் காதலை வளர்த்துவிட்டு, பின்னர் அவரைத் தூக்கி எறிந்த நடிகர்களைப் பற்றி யாரும் கேள்வி கேட்பது இல்லை.

சிலர் மீதானநம்பிக்கைகள் சறுக்கிய நிலையில்தான், விக்னேஷ் சிவன் மீது நயன் நம்பிக்கை வைத்திருக்கிறார். சில வருடங்கள் பகிரங்கமாகவே இணைந்து பயணித்து, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்ட பின்தான், இவர்கள், திருமண பந்தத்தில் இணைந்திருக்கிறார்கள். இதில் என்ன தவறு?.

காதலில் தோற்றால், படாபட ஜெயலட்சுமி, ஷோபா, சில்க் ஸ்மிதா போல் கோழைத்தனமாக உயிரை மாய்த்துக் கொள்ளத்தான் வேண்டுமா? தோல்விகள் முற்றுகையிட்டாலும் எப்படியும் வெற்றி உண்டு என்று தனது வாழ்க்கை மூலம் உணர்த்தியிருக்கும் நயனுக்கு, ஒரு வாழ்த்துப் பூச்செண்டு.

த.அமுதா

– ஆசிரியர்

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள், யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mutamilnesan2022@gmail.com



சொற்கள் குறைந்த இரவை

இந்தநிமிடம்
நீ என்ன
செய்துகொண்டிருப்பாய்
என நினைத்து
கொண்டிருப்பதிலேயே
தொலைந்து விடுகிறது
என் எல்லா
நிமிடங்களும்.

உள்ளம் முழுவதும்
உற்சாக மனநிலையில்
துள்ளிக்குதித்து ஆடுகிற
பொழுது
இனம் புரியாத சோகம் ஒன்று
தழுவிச் செல்கிறது
நீ என் அசையா சொத்து
இல்லை என்பதை
நினைக்கையில்
அசையும் சொத்தாய்
என்னிடம் இருக்கிறாய்
அதனாலேயே
பல நேரங்களில் என்னை
அசைத்தும் பார்க்கிறாய்.

உன் புகைப்படத்தைத்
தேடித் தேடி பார்க்கிறேன்
நீ பேசியது எல்லாம்
போட்டுப் போட்டுக் கேட்கிறேன்
உன் பெயரை
என் பெயரோடு
சேர்த்து எழுதிப் பார்க்கிறேன்
உன் குறுஞ்செய்தி வருமென
காத்து காத்து கிடக்கிறேன்
நீ வரும் வேளை
எப்போது என்று
வலைதளத்தில் பூத்திருக்கிறேன்
என் சிந்தையில்
அதிக நேரம்
உன் நினைவு தான்

கொஞ்சம் கூட
சலிக்கவில்லை
உன் பேச்சும்
அதன்
நினைவும்

உன்
காது மடல் அருகே
சொல்ல வந்தேன்
என் சுவாசகாற்றாலே
ஒரு காதல் கவிதை
சறுக்கி விழுந்தேன்
சற்றும் எதிர்பாராமல்
உன் மென் கழுத்திலே
இலக்கணத்துடன்
இசைக்கும்
இலக்கியமாவோமா?

சொற்கள்
குறைந்திருந்த இரவை
முத்தங்கள் தந்து சமன் செய்

நடிகை ரேகா

மதங்களைக் கடந்து...

சிறுகதை

– தாழை.இரா.உதயநேசன்

இரவு 7 மணி. கல்லூரிக்குச் சென்ற தஸ்ரின் இன்னும் வீடு வந்து சேரவில்லை. வழக்கமாக ஆறு மணிக்கே வந்துவிடுவாள்.

மும்தாஜ் – அக்பரின் ஒரே மகள். கல்லூரிப் படிப்பை முடித்து, வருங்காலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவராக வருவதற்காகத் தன்னைத் தயார்ப்படுத்தி வருபவள். அதிக அறிவு ஆற்றலோடு அழகானவளும் கூட. நேரம் கூட கூட ஒருவிதப் பதற்றம் தஸ்ரின் அம்மாவிற்கும், தாத்தா, பாட்டிக்கும் ஏற்பட, இரும்பு வியாபாரம் செய்யும் அக்பரை அழைத்தார்கள்.

மிகவும் படபடப்புடன் வீட்டிற்கு வந்தார் அக்பர். நண்பர்கள், உறவினர்கள் என்று பல்வேறு அலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டதில், “இல்லை” என்ற பதிலே அனைவரிடமிருந்து வந்தது.

தஸ்ரின் படித்துவரும் கல்லூரியைத் தொடர்பு கொண்டபோது, அங்கு யாருமே தொலைபேசி அழைப்பை ஏற்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த அக்பர், தஸ்ரினுடன் படிக்கும் ஷாகிதா வீட்டிற்குச் சென்று விசாரித்தார். அங்கும், ஷாகிதா இன்னும் வீட்டிற்கு வராததால், அவளுடைய பெற்றோரும், எல்லா இடங்களிலும் அவளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் மட்டுமே வந்தது.

ஷாகிதாவின் வீட்டில் எல்லோரிடமும் பேசிக்கொண்டிருந்த அக்பர், அவளின் தகப்பனாரைப் பார்த்து, “எதுக்கும் நாம போலீஸ் ஸ்டேசன்ல ஒரு கேஸ் கொடுத்துட்டு வந்துடலாம்..? என்று கேட்க,

ஷாகிதாவின் பெற்றோருக்கும் அது சரியென்றே தோன்றியது. ஆகவே, அக்பரும், ஷாகிதாவின் அப்பாவும் காவல் நிலையம் சென்று தங்கள் மகள்களைக் காணவில்லையன்று புகார் அளித்துவிட்டு, இரண்டு சக்கர வாகனத்தில் வேகமாக வீடு திரும்பினார்கள்.

பாரத மாதா தேசியக் கல்லூரி பல ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. கல்லூரியின் பின்புறம், மரங்கள் நிறைந்த அடர்த்தியானக் காட்டுப்பகுதி உள்ளது. பகலில் கூட வெளிச்சம் இல்லாத பகுதியாக இருக்கும்.

அன்று காலை. வழக்கம்போல் தஸ்ரின் ஹிஜாப் அணிந்து, தனது தோழிகள் ஷாகிதா மற்றும் சரஸ்வதியுடன் கல்லூரிக்குச் சென்றாள். ஆனால், அன்று தனக்கு நேரிடவிருக்கும் சம்பவத்தை அவள் அறிந்திருக்கவில்லை.

கல்லூரிக்கு உள்ளே நுழைந்து, வகுப்பை நோக்கி நடக்கும்போதே, ஸ்ரீராம், கிருஷ்ணா மற்றும் சாய்ராம் மூவரும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

“ஏய் தஸ்ரின், உனக்கு பலமுறை சொல்லியாச்சு. ஹிஜாப், முகக்கவசத்தோட வரக்கூடாதுன்னு. இது எங்க பாரதமாதா கல்லூரிக்கு ஒரு இழுக்கு. மரியாதையா அதை எடுத்துடு. சாதாரண உடையிலதான் வரணும்..” என்று சொன்ன அந்த மூன்று பேரும் ஆரஞ்சு நிறத்தில் சட்டை அணிந்து, நெற்றியில் சிவப்பு நிறத்தில் பெரிய பொட்டு வைத்திருந்தார்கள். பார்ப்பதற்கு பாரதியார் நெற்றியில் இருக்கும் பொட்டு போலவே காட்சியளித்தது.

“மதியம் வரைக்கும் தான் உங்களுக்கு அவகாசம். புர்காவ எடுக்கலன்னா, விளைவு ரொம்ப கடுமையா இருக்கும்.. ஷாகிதா உனக்கும் சேர்த்து தான் சொல்றோம்...” தனது முரட்டுத்தனமானப் பேச்சில் கொந்தளித்தான் சாய் ராம்.

“சாய் ராம்.. நீ இப்படி பேசாத. அவங்க நம்மகூட படிக்குறவங்க. இப்போ திடீர்னு உடை கட்டுப்பாடுன்னு ஏன் சொல்றீங்க..? அது அவங்களோட உரிமை. எப்படி உடை உடுத்தணுமுன்னு சொல்றதுக்கு நீங்கல்லாம் யாரு...? படபடத்தாள் தோழி சரஸ்வதி.

“ஏய்... சரஸ்வதி... நீ என்ன அந்த முஸ்லீம் கருப்பு பூதங்களுக்கு சப்போர்ட்டா..? அவங்க புர்கா போட்டுக்கிட்டு,

இந்த பாரத மாதா கல்லூரிக்குள்ள வர்றத ஏத்துக்க முடியாது. மரியாதையா அவங்ககூட சேராம... ஒதுங்கிப் போய்டு. நீ நம்ம ஆளு. அப்படி இல்லன்னா விசயம் ரொம்ப விபரீதமா ஆகிடும்... போங்க... போங்க... என்ன நடக்குதுன்னு பார்ப்பீங்க...” அவர்கள் மூவரும், தஸ்ரினையும், ஷாகிதாவையும், அவர்களின் மத நம்பிக்கையையும் ஆபாச வார்த்தைகளால் திட்டிக்கொண்டே சென்றார்கள்.

அவர்கள் மூவரும் அங்கிருந்து புறப்பட்டதும், காவி உடையணிந்த வேறு மூன்று பேர் அவர்களுடன் இணைந்துகொண்டார்கள். ஆனால், அவர்கள் கல்லூரி மாணவர்கள் இல்லையென்பது அவர்களின் தோற்றத்திலேயே தெரிந்துகொள்ள முடிந்தது.

தஸ்ரின் அப்பா, சித்தப்பா மற்றும் ஷாகிதாவின் பெற்றோர், உறவினர்கள் என எல்லோரும் ஒன்றாகக்கூடி, அவர்கள் படிக்கும் கல்லூரிக்குச் சென்று பார்க்கலாம் என்று புறப்பட்டார்கள். காலையில் கல்லூரியில் நடந்த சம்பவங்களை சரஸ்வதி சொன்னதிலிருந்து, இருவருடைய பெற்றோருக்கும் ஒருவித பயம் தொற்றிக்கொண்டது.

பதற்றத்தோடே கல்லூரியை வந்தடைந்தார்கள். வாயிலிலிருந்த காவலர் அவர்களை அனுமதிக்க, அவர்கள் கல்லூரியின் பின்புறமிருந்த அந்த அடர்த்தியானக் காட்டுப் பகுதியை அடைந்து, டார்ச் லைட் வெளிச்சத்துடன் உள்ளே சென்றார்கள்.

“திக்... திக்..” என்று அனைவருடைய மனதும் அடித்துக்கொண்டது. அவர்கள் நடந்து செல்லும் வழியில் ஒரு முற்புதரின் மீது கருப்புநிற புர்கா ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. இன்னும் சற்றுத் தொலைவில் பெண்களின் காலணிகள் இருந்தன. தஸ்ரின், ஷாகிதாவின்

பெற்றோர் விபரீதத்தைப் புரிந்துகொண்டு, அவசர அவசரமாக புதர்களுக்குள் தேட ஆரம்பித்தார்கள்.

அங்கே, “உடைகள் கிழிக்கப்பட்டு, உடலில் கீறல் மற்றும் காயங்களோடு தஸ்ரினும், ஷாகிதாவும் மயக்க நிலையில் இருந்ததைக் கண்டார்கள்.” தஸ்ரின் அப்பா ஓவென அழுது மயக்கமடைந்தார். அதே நேரத்தில் காவல்துறையும் அங்குவந்து சேர, ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, இருவரையும் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள்.

சில மணிநேரத்திற்குப் பின், தஸ்ரின் கண்விழித்தாள். தனக்கும், ஷாகிதாவிற்கும் நடந்த கொடுமைகளை விவரித்துக் கொண்டிருந்தாள் வருங்கால மாவட்ட ஆட்சித்தலைவர் தஸ்ரின்.

அதே நேரம், பாரத மாதா கல்லூரி நிர்வாகத்தையும், சம்மந்தப்பட்ட மாணவர்களைக் காப்பாற்றவும் மத ரீதியானக் கட்சிகள் முனைப்புக் காட்டிக்கொண்டிருந்தன.

பொழுது விடிந்தது. செய்தி காட்டுத்தீப்போல கல்லூரியில் மட்டுமல்ல... மாநிலம் முழுவதும் பரவியது.

“ஹிஜாப் தங்கை வாழ்க..” என்ற கோஷங்கள் ஹிஜாப்புக்கு ஆதரவாகப் பெருகிக்கொண்டே இருந்தது..!

மதங்களைக் கடந்து, நீதியின் பின்னால் அணிவகுத்தார்கள் மக்கள்.

முனைவர் நளினிதேவியின்

புதிய ஆத்தி சூடி!

முனைவர்.நா.நளினி தேவி அவர்களின் சிறந்த படைப்புகளில் ஒன்றாக பெண் ஆத்திசூடி. அறிமுக உரையில் பெண்ணுக்கு விடுதலையின்றி நாட்டுக்கு விடுதலை இல்லை. பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளுகின்ற இலக்கியங்கள் மாற்றப்பட வேண்டும் என்கிறார். இந்நூலை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ள பாவேந்தன் அவர்கள்.

காலந்தோறும் பல ஔவைகள் தோன்றி வருவதன் தொடர்ச்சியாக இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். இது பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும் என்கிறார். மகிழ்வுரையில் நா. நளினி தேவி அவர்களின் தம்பி ச.நா. கார்த்திகேயன் அவர்கள். எல்லாமே மாறிவரும் சூழலிலும் ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற நிலை மட்டும் மாறவில்லை. ஆணுக்குள்ள இலக்கணங்களை மாற்றியாக வேண்டும் என்கிறார். பயனுரையில் பிரபு கா. நாகநாதன் ஆதிக்க இருள் நீக்கி ஆண்கள் தங்களைப் புதிய மனிதர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

நூலில் ஆசிரியர் நமக்குப் பயிற்சி அளிக்கிறார். அடக்குதல் வீரமன்று. ஆண் மையம் அகற்று. ஐயமுறேல் பெண். கிளிக்கூடன்று வீடு. சமன்மை உருவாக்கு. சொத்து அல்லள் பெண். தாய்மை இருவருக்கும் பொது. தையலை உயர்த்து. நாட்டு பெண்ணறம். நோன்புகள் திணிப்பே. பூட்டாதே பெண் ஆற்றல். பௌவம்(கடல்) பெண் வலிமை. மென்மையே வலிமை. வானம் பொது. வையம் பெண்ணே. இவை போன்ற முத்து முத்தான புதிய ஆத்திசூடிகளை நமக்குச் சொத்தாக்குகிறார் நமது அன்பிற்கினிய புதிய ஔவை. இவரின் 16ஆம் நூல் இது. இடைவிடாமல் எழுதுகிறார். நம்மைப் பயிற்றுவிக்கிறார். நூலை வாங்கிப் பயனுறுவோம். விலை. ரூ.40.

முனைவர்.நா.நளினி தேவி,
முத்தமிழ்க் குடில்.
9/7, இராமு பிள்ளை சந்து,
தெற்குவெளி வீதி,
மதுரை – 625001
அலைபேசி: +919791352820

அருட்திரு பிலிப் சுதாகர்

முத்தமிழ் கவிதை வீதி

கண்ணிலே அன்பிருந்தால்

கண்ணிலே அன்பிருந்தால்
கதைகளோ மிருதுவாகும்
கருணையின் புரிதலிலே
காயங்களும் ஆறிவிடும்

கல்லான இதயமும்
கரைந்தே போகும்
கரையில்லாக் கடலாய்
களிப்போ பெருகிடும்

சொல்லின் அழகில்
சொர்க்கம் தெரிந்திடும்
சோதியாய் வளர்ந்து
சோகங்கள் துரத்திடும்

தரணியில் வழிந்திடும்
தாட்சண்யம் வாழ்கவே
தண்மையில் குளிர்ந்திடும்
தயாளகுணம் வளர்கவே

டாக்டர் ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை.

வேற்றுமை இருப்பினும் ஒற்றுமை

ஒன்றே பலவாகி உருவான உலகமிது..!
பலவும் ஒன்றேயெனப் புரிந்திடக் கலகமேது..!
ஆகாற்றினை அறிவித்தவன்
போகாற்றினை மறைத்ததேன்..!

சென்றிடவோ பலவழி சேருமிடம் ஒன்றல்லவோ..!
வேற்றுமையில் ஒற்றுமை வேதமான அடிப்படை..!
ஒன்றிணைந்து எதிர்த்தாலே வென்றதே நம்படை..!!
ஆயிரம் சாதிகளும் சோதரரென ஆனதாலே..!

பாயிரம் சோதிகளும் பற்றாகிப் போனதாலே..!
முடியுரிமை இராச்சியங்கள் தளர்ந்தே அழிந்தது..!
குடியுரிமை இந்தியா வளர்ந்தே செழிக்குது..!!

– தி.ஸ்ரீராமன்

கனவு காணுங்கள்

அண்டத்தை அளவிடவே கனவு காண்போம்
அழிவில்லா வாழ்விற்கே ஒன்று சேர்வோம் .
பண்டத்தைப் பகிர்ந்துண்ணப் பழகிக் கொள்வோம் .
பாசத்தை நேசத்தை பண்பால் காட்டிக்
கண்டத்தைக் காற்றுடனே இணைத்துப் பார்த்துக்
கண்டிடுவோம் கனவுதனை நதியும் ஒன்ற
பிண்டத்தைக் கரைக்கின்ற கடலும் சேரப்
பிறர்க்காக உயிர்வாழ வேண்டு மன்றோ !!

சரஸ்வதி பாஸ்கரன்,
திருச்சி.

முரண்

சர்க்கரை இல்லாத
கரும்பு சாறு கேட்டான்
சர்க்கரை நோயாளி

மலை ஏறி சென்றான்
தேன் எடுக்க
கை இழந்தவன்

ஆற்றில் குதித்து
கரை சேர நினைத்தான்
நீச்சல் தெரியாதவன்

மீனே சிக்கவில்லையென
வருந்தி நின்றான்
வலை விரிக்கத் தெரியாதவன்

சமத்துவ சமுதாயம்
அமைப்போம் என்றான்
சாதி சங்கத் தலைவன்

பெற்றோரை வாழ்த்தினான்
முதியோர் இல்லத்தில்
சேர்த்துவிட்டு வந்த மகன்

தலைவன் பிறந்த நாளுக்கு
அன்னதானம் கொடுத்தவனின்
வீட்டில் எல்லோரும்
வயிற்றுப் பசியோடு...

– செ.இலட்சுமணக்குமார்,
ஈரோடு

வண்ணங்களும் எண்ணங்களும்

இயற்கையின் எழிலாய்
இன்னுயிரில் இனிக்கும்
பச்சை வண்ணமே!

தூய்மையின் சிறப்பாய்
நம்மை ஆட்கொள்ளும்
வெள்ளை வண்ணமே!

காட்சிக்கு இனிதாய்
ஏழ்கடல் விண் கொண்ட
ஊதா வண்ணமே!

மங்கலத்தின் மகிமையாய்
மங்கையர் போற்றிடும்
மஞ்சள் வண்ணமே!

செங்கதிரோன் கொண்ட
சிவப்பு வண்ணமே!

ஏழ்வகை வண்ணமாய்
நாம் ரசிக்கும் வானவில்லின்
வண்ணங்களே!

வண்ணங்களைக் கண்டு
மயங்காத மனித மனமில்லை
தூய எண்ணங்களைக் கொண்டு
உயராத மனிதரில்லை!
எங்கெங்கு காணினும்
வண்ணங்களே நம் வாழ்வை
இனிப்பாக்குகின்றன.

வண்ணங்கள் காட்சிக்கு
விருந்தாகும்
எண்ணங்கள் நம் வாழ்வுக்கு
விருந்தாகும் எண்ணத்தில்
தூய்மை போற்றுவீர்.

–ம.அமிர்தா தமிழரசன்,
தேனி

தனித்தனி அறைகளில்

படிக்கின்ற பிள்ளைகளும்
வாசிக்கிற மனைவியும்
எழுதுகிற நானும்
தனித்தனி அறைகளில்
மௌனத்தில் கிடக்கிறோம்

எழுதப்படிக்கத் தெரியாத
மியாவ் மட்டுமே
எல்லோருடனும்
கொஞ்சிப்
பேசிக்கொண்டிருக்கிறது

துயரங்களை
இறக்கிவைக்க
இன்னொரு தோளின்றி
சதா உம்மென்று
ஒற்றையாய்
தொங்கிக்கொண்டிருந்த
ஒரேகடவுள்
இறங்கிவந்து
சிரித்து விளையாடுகிறார்

தத்தெடுத்த
நாய்க் குட்டியுடன்
கைபேசிகளால்
களவாடப்பட்ட குழந்தைகளின்
மகிழ்ச்சியைச் சிறுகச் சிறுக
மீட்டுத்தருகிறது
தொட்டியில் துள்ளியாடும்
வண்ண மீன்கள்

மறந்துவிட்ட
கிளிப் பேச்சை
உறங்கிக்கிடந்த
குயில் பாட்டை
சிறகசைத்து
துளிர்க்கச்செய்கிறது
சின்னஞ்சிறு
அலகுகளால்
காலத்தை முத்தமிட்டு
பின்னகர்த்தும்
காதல் பறவைகள்

தீராத இறுக்கங்களில்
கட்டுண்டு
கிடக்கிறது ஆறறிவு

இயல்பில் நின்று
அன்பால் வருடி
அழுத்தங்களையும்
கவலைகளையும்
கட்டுடைக்கிறது ஐந்தறிவு

– வீரமணி

பேருந்தும் பரிதவிப்பும்



– அய்ஷத் அப்சத்
பாலமுனை, இலங்கை.

எம்மூரான பாலமுனையிலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்திலுள்ள அக்கரைப்பற்று நகருக்கு பாடசாலைக்கும், மாலை நேரவகுப்புகளுக்கும் செல்வோம்.

அரசப் பேருந்துகளில் பயணம் செய்ய மாதாந்த பருவ காலச் சீட்டு நியாய விலையில் வழங்குவார்கள்.

அதனையே நாங்கள் பயன்படுத்துவதால் சில சாரதிகள் வெள்ளைச் சீருடையைக் கண்டதும் நிறுத்தாமல் செல்வார்கள்.

பேருந்தில் ஏறிவிட்டால் நடத்துனர்களின் கோபப் பார்வை வேறு.

வெள்ளையைக் கண்டதும்,
பேயாய் மாறும்,
நடத்துனர் முகம்.

குறித்த நேரத்திற்கு பேருந்து வராவிட்டால் அன்றையநாள் விடுமுறையாகும்.

விசேட விடுமுறை,
வழங்கும் பலமுறை,
பள்ளிப் பேருந்து.

வீட்டுப்பாடம் செய்யாத நாட்களில் பேருந்து வரக்கூடாதென்று பிரார்த்தனை வேறு..

மாலை நேர இறுதிப் பேருந்து நிறுத்தாமல் சென்றாலோ,

சில நிமிடம் முந்திச் சென்றாலோ நிர்க்கதியாகி–இருள் சூழும் நேரம் பெண் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பிரதான பாதையோரமாய் நடந்து ஊருவந்து சேர்வோம்.

வகுப்புத் தோழிகளை,
பக்குவமாய் வீடு சேர்க்கும்,
பள்ளி நட்பு.

அதற்கிடையில் வீடுகளில் பரபரப்பு பற்றிக் கொள்ளும். அதிலும் பெண் பிள்ளைகளின் வீடு அதோகதிதான்..

பிள்ளையின் படிப்பை,
கேள்விக்குள்ளாக்கும்,
பெற்றவளின் தவிப்பு.

பசுமை கார்டன்

– இரட்டைக்கரடு **மு.இளங்கோவன்**

சுரேந்தரின் மேல்படிப்புக்காகப் பாதி நிலத்தை விற்றுவிட்டு

வெளிநாட்டு வேலைக்காகவும், மகளின் திருமணத்திற்காகவும் மீதியை விற்று விட்டு, சுரேந்தர், மருமகள், மனைவியோடு வெளிநாட்டுக்கேப் போய் செட்டிலானார் மாரப்பன்.

பேரனின் முதல் மொட்டைக்காக உள்ளூருக்கு வந்திருந்தார். நல்ல படியாக வேண்டுதல் நிறைவேற்றி விட்டு வேகமாக விமான நிலையம் புறப்பட்ட மகன் சுரேந்தரிடம் “டேய் சுரேந்தர் நாம வித்துட்டுப் போன தோட்டத்தையும், பழைய வீட்டையும் ஒரு எட்டு எப்படியிருக்குன்னுப் பார்த்துட்டு போயிரலாண்டா, மனசுக்கு கொஞ்சம் சந்தோஷமா இருக்கும்டா,”என்றார் மாரப்பன்,

“சொன்னா கேட்கவா போறீங்க? பிளைட்டுக்கு நேரமாச்சி போனமாப் பாத்தமான்னு கிளம்பணும் சரியா?” கட்டளையிட்டான் சுரேந்தர்.

சீறிப்பாய்ந்த வாடகைக் கார் சில கிலோமிட்டர் சென்று,, மாரப்பனின் பழைய தோட்டத்தை ஒட்டி, நிதானமாக நின்றது. இறங்கிய மாரப்பன் தலையில் இடி தாக்கியது போல் ஆடிப்போனார்,

பார்த்துப் பார்த்துப் பாத்திக் கட்டிப் பராமரித்த வயலில் நெல் நட்ட இடமெல்லாம் கல் நடப்பட்டு, கலர் கொடிகளாலாக காட்சி தந்தது, பழைய பச்சை பசும் வயல்,

“பசுமை கார்டன்” என்ற பெயர் பலகையோடு,

“அடப்பாவிங்களா! சாப்பாடு போடற வயலையெல்லாம் அழிச்சி இப்படி கூப்பாடுப் போட்டு வித்துபப்புட்டு,

நாளைக்கு நம்மபப் பேரப்புள்ளைங்களுக்கு

வேறெதைடா திங்க கொடுப்பீங்க?என்று மண்டியிட்டு கதறி அழுதார் மாரப்பன்,

“அப்பா எந்திரிங்கப்பா போரவர்றவங்கெல்லாம் பாக்குறாங்க பிளைட்டுக்கு லேட்டாச்சி. இப்ப கிளம்பறீங்களா இல்லையா?”கோபத்தில் மகன் கத்த

வயலை விட்டு எழ மனதேயில்லாமல் நடைப் பிணமாய் மறுபடியும் கார் ஏறி ஏர்போர்ட் கிளம்பலானார் மாரப்பன் கலங்கிய கண்களோடு!,,,,.

கவிதை வீதி

மௌனித்த இரவில்

கனவுகளைப்
பரிமாறிக் கொண்டிருந்தோம்
இறுகிக் கரடுதட்டி
கடும் மோனம் கொண்டிருந்த
மலைச்சரிவின் பாறைகள்
இளகி நெகிழ்ந்து
பசுமையுறுகின்றன
பிரியங்களைத் திரட்டிப்
பெயல் விசிறிய
குமிழ் முத்தங்கள்.

ஆவேசமாய் நெருங்கிக்
கன்னந்தொட்டுத் தெறிக்கையில்
திசையற்றுச் சிதறிய வண்ணங்கள்
உன்னை
மொழி பெயர்க்கின்றன...

மிக்க நிசப்தமான இரவில்
மனத்தைக் கிளர்த்திச் செல்கிறது
வளைய வளையப்
பெய்து ஓய்ந்த மழையின் வாசம்...

சொட்டியபடியிருக்கும்
அன்பின் செருக்குகளை
எலும்பு மஜ்ஜைக்குள்
சேகரிக்கிறேன்...

பேசிக் களித்த சொற்களை
மடிப்பதும் பிரிப்பதுமாய்
நாட்கள் நகர்கின்றன..

இமையோரத்தின்
சிறுமுடியொன்று
முத்தம் வேண்டி வதைக்கிறது..
சகலமும் மௌனித்த இரவில்

காலக் கம்பளமேறி
நடுவானில் பெயரில்லாத
ஏதோ ஒன்றாய் ஆகிவிடும்முன்
உயிர் வருடும்
உன்குரலைக் கேட்கிறேன்....
பெருங்காதலாகிறது வாழ்வு ..

முன்னும் பின்னுமாக
அலைவுறத் தொடங்குகிறது
பிரபஞ்சம்

தரைதொட்டு எழும்புகிறதென்
ஊஞ்சல்
நிலவுரசி மீள்கின்றன பாதங்கள்..
சூல் துயில் கதகதப்புக்கு
நீயென்று பெயரிடுகிறேன்.. !!

– சுசீலா மூர்த்தி

திணைகளில் இஃது எத்திணை...?

சோளக் காட்டுக்குள்
துரத்திப் பிடித்திருக்கிறேன்
சாமைக்காட்டுக்குள்
சங்கதி பேசி இருக்கிறேன்
கடலைக்காட்டுக்குள்
கபடி ஆடி இருக்கிறேன்
வயல்காடுகளுக்குள்
வம்பு செய்திருக்கிறேன்

சென்னையில் இவை என்ன
புதிய காடுகள்...?
இலைகள் இல்லாமல்
கிளைகள் இல்லாமல்
காற்றுக்கு ஆடாமல்
கால்முளைத்திருக்கின்றன!
மண்தொட்டு எழுந்து
விண்முட்ட உயர்ந்து
கண்எட்டுந்தூரம்
காடுகளாய்ப் பரந்து
இவை என்ன புதிய காடுகள்..?
எத்தனை மருதங்களும்
எத்தனை முல்லைகளும்
இதற்குள்
அடங்கிக் கிடக்கின்றனவோ
எத்தனை பாக்கங்களும்
எத்தனை தேக்கங்களும்
இதற்குள்
முடங்கிக் கிடக்கின்றனவோ
ஐந்திணை வாழ்வியலில்
இது எந்தத்திணை
நம்மை அறியாமல் காலம்
எழுதிக்கொண்டிருக்கிறதோ
இன்னொரு திணை..?

– பாவலர் பொற்கைபாண்டியன்

ஓங்காரச்சுவை

சுவைகளின் பின்னூட்டத்தில்
சுயங்களின் பிரயாசைகள்.
யாருமற்ற வனத்திடை
வாய்பிளக்கும் கனவு.
ஈரத்தை சுவீகரிக்கும்
சல்லிவேர்களின் தாகம்.
ஒரு சமயம்
இருட்டுப் பயணத்தில்
ஓடைக்கரை கடக்கையில்
கூவும் ஆந்தைகளின்
பசித்த குரல்.
போதும்–
சொல்லாமல் வந்த
அனுபவங்களின்
உள்முக தழும்புகள்

– ராசி அழகப்பன்

எழுதலின் சிலிர்ப்பு

விடுபட்ட வில்லின்
இலக்கு அடைகையில்
எய்தவனின் மனதில்
ஆகாய பரவசம்.
விழுந்தவன் எதிரியா
சமவெளி ரசனையா
மூன்றாவது பார்வையே
சரிபார்த்து சொல்லும்.
எந்நிலையிலும்
வரப்பைத் தாண்டாத
நீரும்
வாழ்வியலைத் தீண்டாத
காற்றும்
காலக் கணக்கில் பதியாது.
அதோ–
அசரீரீ
அழைப்பைக் கேள்.

மஞ்சள் கயிறு

அவள் ஒரு தேவதை
கனவில் மட்டுமே
வந்தவள்
கண் முன்னே
வந்து நின்றாள்
தோள் நிமிர்ந்து நின்றவள்
தோலுரிந்தும் தென்பட்டாள்
யார் யாரோ
அவளிடம் கொட்டியதை
எல்லாம் கொட்டினாள்

அவள் கொட்டிய
வார்த்தைகளில் எல்லாம்
அமிலத்தின் நெடி

ஒரு நாவால்
பல முறை அவளது
நாக்கைப் பிடுங்குவது போல
கேட்டு இருக்கிறார்கள்
ஒரு முறை அவர்களின்
நாக்கைப் பிடுங்கி
பார்த்திட ஆசை அவளுக்கு
என்ன செய்ய?

பெரும்பாலும்
பூனைக்கு மணிக்கட்ட
விடுவதில்லை
அந்த ஒற்றை
மஞ்சள் கயிறு

– சிவமணி

வஞ்சிப்பாக்களின் கரகாட்டம்

எதுகை மோனை மத்தளங்கள்
சீர்மிகு தோற்றமுடன்
அடிபிழறாமல் ஆடும்
வஞ்சிப்பாக்களின் கரகாட்டம் !

எழுத்தின் உச்சரிப்பில்
தாளங்கள் வசை பாடாது
இசையினை வசமாக்கி
அசைபோடும் ஊர்மக்கள் !

பொய்க்கால் குதிரையின்
துள்ளலில் செப்பலோசை...
தூங்கல் ஓசை தராமல்
தொடை தட்டியபடி
அகவல் பாடும் ஆசிரியப்பாக்கள் !

குறில் நெடில் என
பாதைகள் நீள...
அணியணியாய் திரளும் கூட்டம் !

காலம் காலமாய்
கற்பனைத் தெருக்களில்
யாப்பு வடமிழுத்தபடி
கவிதைத் தேர்கள் !
அங்கே
எண்ணங்களில்
வண்ணங்கள் சேர்க்க நவீனம்
ஹைக்கூ தன்முனையென
அதிர்வெடியும்
வான வேடிக்கையும் !



–கா.ந.கல்யாணசுந்தரம்

கலைஞரின் திரைத்தமிழ்

– கவிபேரரசு வைரமுத்து

எட்வர்டு மைபிரிட்ஸ் 1830-ல் அசைவுகளைப் படமாக்கினார். அதன் தொடர்ச்சியாகப் படச் சுருளை உருவாக்கினார் ஈஸ்ட்மென். படக் கருவியை உண்டாக்கினார் தாமஸ் ஆல்வா எடிசன். இப்படி மூவர் கூடிப் பெற்ற குழந்தையாய் சினிமா பிறந்தபோது உலகம் அறிந்திருக்காது, அத்தனை கலைகளையும் உள்ளிழுக்கப்போகும் ஆக்டோபஸ் கலை அதுவென்று. 1897-ல் சென்னை விக்டோரியா ஹாலில், தமிழர்கள் அதுவரை காணாத ஒரு கருவியினால் 'அரைவல் ஆஃப் தி டிரெயின்' படத்தை எட்வர்ட்ஸ் அறிமுகப்படுத்தியபோது, திகைப்பில் ஆழ்ந்த தமிழர்கள் அறிந்திருக்க மாட்டார்கள், அந்தக் கருவிக்குள் கருவாகித்தான் ஐந்து முதலமைச்சர்கள் தமிழகத்தை ஆளப்போகிறார்கள் என்று.

நடிகர்களே பாடகர்களாகவும் பாடகர்களே நடிகர்களாகவும் இயங்கிவந்த மேடை நாடகங்கள் திரைப்படத் தேரேறியபோதும் பாடல்கள் என்ற பண்ட மூட்டைகளை விட்டெறியவோ குறைத்துக்கொள்ளவோ முடியவில்லை. பாடல்கள் பெரும்பாலும் சம்ஸ்கிருதம் கொண்டே சமைக்கப்பட்டன. வெண்பொங்கலில் காணக் கிடைக்கும் மிளகுபோல சம்ஸ்கிருதத்துக்கு மத்தியில் தமிழ்ச் சொற்களும் ஆங்காங்கே தட்டுப்பட்டன. 'வதனமே சந்த்ர பிம்பமோ – வசந்த ருது மன மோஹனமே – என் ஜீவப்ரியே ஷியாமளே – சாரசம் வசீகர கண்கள்'

என்றெல்லாம் இசைத்தன. வசனங்களிலோ பிராமண மொழியும் மணிப்பிரவாளமும் பின்னிப் பின்னிக் கொஞ்சிக் குலாவின.

1937-ல் வெளிவந்த 'அம்பிகாபதி', 1942-ல் வெளிவந்த 'கண்ணகி' இரண்டும் திரைத் தமிழை இளங்கோவன் நடைமாற்றம் செய்ததற்கான சாகாத சான்றுகளாகும். ஆனால், இளங்கோவனை விட, டி.வி.சாரியை விட, 'கவியின் கனவு' எழுதிய எஸ்.டி.சுந்தரத்தை விட, 1945-ல் வசனம் எழுதவந்த பாரதிதாசனை விட, 'அமரகவி'க்கு வசனம் எழுதிய சுரதாவை விட, 'வால்மீகி'க்கு வசனம் எழுதிய ஏ.எஸ்.ஏ.சாமியை விட அண்ணாவும் கலைஞரும் திரைத் தமிழில் எட்டாத உயரத்தை எட்டினார்களே!

ஏது காரணம்?

நடைமாற்றம் செய்தவர் இளங்கோவன். சமூகத்தையே மடைமாற்றம் செய்தவர்கள் அண்ணாவும் கலைஞரும்.

திரைத் துறையில் பழைய உள்ளடக்கங்களோடு பயணப்படுவது என்பது பிணத்துக்கு ரத்த தானம் செய்வது என்று புரிந்துகொண்டவர்கள், நிகழ்காலத்தின் மீது நெருப்பிட்டார்கள். பகுத்தறிவு மாட்சிக்கு, மூடநம்பிக்கை வீழ்ச்சிக்கு, இனமொழி மீட்சிக்கு, சுயமரியாதையின் ஆட்சிக்கு அவர்கள் திரைக் கலையைப் பயன்படுத்தியபோது ஒரு கற்பூர மலையில் தீப்பந்தம் எறிந்ததுபோல் நாடே பற்றி எரிந்தது.

அண்ணாவை விடப் பதினைந்து வயது இளையவர் கலைஞர். எனினும், திரைத் துறையில் அண்ணாவை விடவும் அவர் இரண்டு வயது மூத்தவர். அண்ணாவின் முதல் படம் 'நல்லதம்பி' வெளிவந்தது 1949 பிப்ரவரி 4. அடுத்த மூன்று வாரங்களில் - பிப்ரவரி 25-ல் - 'வேலைக்காரி' வெளியானது. ஆனால், எம்.ஜி. ராமச்சந்தர் கதாநாயகன் என்றும், உதவி ஆசிரியர் மு.கருணாநிதி என்றும் எழுத்துகளைச் சுமந்த 'ராஜகுமாரி' அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்துவிட்டது. கலைஞரின் பெயர் இடம்பெறாமலே வெளியான 'அபிமன்யு'வில் இடம்பெற்ற 'உடைந்த வாளேனும் ஒரு வாள் கொடுங்கள்' என்ற நட்சத்திர வாக்கியமே "யாரய்யா இதை எழுதியது?" என்ற பேச்சை உருவாக்கிவிட்டிருந்தது.

திராவிடர் கழகம் உருவான 1944-க்கும் திமுக உருவான 1949-க்கும் இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளில் திரைத் துறையில் தன் அழுத்தமான சுவடுகளைப் பதிக்கத் தொடங்கிவிடுகிறார் கலைஞர். முதல்

படத்துக்கு வசனம் தீட்டும்போது அவரது வயது 23. பயமறியாத வயது; தமிழின் நயமறிந்த மனது. திராவிடர் கழகம் அவர் கைகளில் ஒரு தீப்பிடித்த பேனாவைத் திணிக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏறுமுகம் அந்தத் தீயின் மீது நெய் மழை பெய்கிறது. எரிகிறது; பற்றி எரிகிறது. மடமை எரிகிறது; மூடநம்பிக்கை எரிகிறது; வருணாசிரமம் எரிகிறது; சூழ்ச்சி எரிகிறது; ஆட்சி எரிகிறது; யுகக் குப்பை எரிகிறது; ஒடுக்கப்பட்டவர் மீது ஆண்டாண்டு காலம் செலுத்தப்பட்ட ஆதிக்கம் எரிகிறது; இடதுசாரிச் சிந்தனைகளால் அநியாயத்தின் அடிப்படை எரிகிறது. வற்றிக் கிடந்த வாழைத்தண்டு மனங்களிலும் லட்சியம் எரிகிறது.

அவர் எழுதிய சரித்திரப் படங்களிலும் சமூகமே பேசப்பட்டது. 1950-ல் அவர் வசனம் எழுதிய 'மருதநாட்டு இளவரசி'யில் பலிபீடத்தின் முன்னே கடைசி வசனம் பேசுகிறார் காண்டீபனாகிய எம்.ஜி.ராமச்சந்தர்: "நீதியின் நிலைக்களமாய், நேர்மையின் உலைக்களமாய் வாழ்ந்த வண்டமிழ் வளநாடே!

நீ, சூதர்களின் உறைவிடமாய், சூழ்ச்சியின் இருப்பிடமாய் ஆனது ஏன்? இந்த மண்ணிலேதான் பிறந்தேன்! இந்த மண்ணிலேதான் மழலை மொழி பேசித் தவழ்ந்து விளையாடினேன்! இந்த மண்ணிலேதான் சவமாகச் சாயப்போகிறேன். வந்தாரை வாழ வைக்கும் இந்த மண்ணில் சொந்த நாட்டுக்காரன் அநியாயமாகச் சாவதா? குற்றமற்றவன் சாவதா?"

இறந்த காலத்தில் பேசப்பட்ட இந்த வசனம், நிகழ் காலத்தின் நெற்றி சுட்டது. "சிங்கத் திருநாடே நீ சிலந்திக் கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழ வைக்கும் வளமிகு தமிழகமே நீ சொந்த நாட்டானையே சுரண்டுவது எத்தனை நாட்களாக?" என்று 'பராசக்தி'யில் அறிமுகமான கணேசனின் காந்தக் குரலில் அக்கால அரசியல் நிர்வாணமாய் நிறுத்தப்பட்டுத் தோலுரிக்கப்பட்டது.

முன்னோடிகளின் உரையாடலுக்கும் கருணாநிதியின் உரையாடலுக்கும் என்ன வேறுபாடு என்று எண்ணிக் கிடந்தேன். ஏனையோர் எழுத்துகளெல்லாம் திரையோடு தேய்ந்தழிகின்றது; கலைஞரின் உரையாடலோ திரையைக் கிழித்தெறிந்து தெருவுக்கு வந்து விழுகிறது. அவர் மேடையின் உரையாடலும் திரையின் கலையாடலும் ஒன்றுக்கொன்று உறவு கொண்டிருந்ததால், கலை வேறு.. கட்சி வேறு என்றாகாதபடி இரண்டையும் ஒன்றென்று கொண்டான் கழகத்தின் இளந்தொண்டன்.

கதை வசனகர்த்தாவுக்கென்று ஒரு தனி அடையாளத்தை உருவாக்கினார் கலைஞர். அவரது திரை மதிப்பு உயர்ந்தது. 'மருதநாட்டு இளவரசி' வசனப் புத்தகத்தின் விலை 3 அணா. 'மந்திரி குமாரி' 4 அணா. 'பராசக்தி' வசனப் புத்தகத்தின் விலை 1 ரூபா என்பதே அவரது சந்தை மதிப்புக்கான சாட்சியாகும். பாடல்களை இசைத் தட்டுக்களாய்க் கேட்ட தமிழர்கள், வசனத்தை இசைத் தட்டுகளில் கேட்கும் புதிய கலாசாரத்தைத் தொடங்கிவைத்தவர் கலைஞர். "கோவிலிலே குழப்பம் விளைவித்தேன்.. கோவில் கூடாது என்பதற்காக அல்ல; கோவில் கொடியவரின் கூடாரமாய் இருக்கக் கூடாது என்பதற்காக', 'பூசாரியைத் தாக்கினேன்.. அவன் பக்தன் என்பதற்காக அல்ல. பக்தி பகல் வேஷமாகிவிட்டதைக் கண்டிப்பதற்காக" என்று தீப்பிடித்த வார்த்தைகளும்... "அம்பாள்

எந்தக் காலத்திலடா பேசினாள்? அறிவு கெட்டவனே" என்ற அமில வாக்கியமும், "இட்லி சுட்டு விற்பது தானே தமிழ்நாட்டிலே தாலி அறுந்தவர்களுக்கெல்லாம் தாசில் உத்தியோகம்" என்ற கண்ணீர் கொப்பளிக்கும் சொல்லாடல்களும் நீதிமொழிகள் பேசப்பட்ட தமிழ்நாட்டில் வீதிமொழிகளாய்ப் பேசப்பட்டன.

படத்துக்கு எழுதிய வசனம் பழமொழியாயிற்று. "பராசக்தி வசனத்துக்கு உங்களுக்கு வந்த உயர்ந்தபட்சப் பாராட்டு எது?" என்று கேட்டேன் கலைஞரிடம்.

"பக்கத்தில் உட்கார்ந்து படம் பார்த்த கண்ணதாசன் சொன்னது" என்றார்.

"என்னது?" என்றேன்.

"போய்யா! ஒம்மப் பாத்தா ரொம்பப் பொறாமையா இருக்கு."

இங்கே பொறாமைக்குப் பொருள் பொறாமை அன்று!

கலைஞரின் மிக அழகான ஒரு கவிஞரும் உண்டு. 1950-ல் தமது 26-வது வயதில் 'மந்திரி குமாரி'யில் அவர் எழுதிய ஒரு காதல் உரையாடல் இது.

ஜீவரேகா: நேற்றிரவு நீங்கள் வராததால் என்னால் பௌர்ணமியின் அழகையே ரசிக்க முடியவி?ல்லை...

வீரமோகன்: எதற்கெடுத்தாலும் நிலவு தான். ஏன்? அமாவாசை அழகாயில்லை?

ஜீவரேகா: நீங்கள் இருட்டைக்கூட ரசிப்பீர்களா? (இங்கே வினைப்படுகிறது கலைஞரின் கவிதைக் குறும்பு).

வீரமோகன்: ஆம்! சித்திரத்தை அழகுபடுத்தும் நிழல்கோடுபோல, உன் கண்ணின் கடைக்கூட்டில், கனி இதழின் ஓரத்தில், கன்னத்துச் சரிவுகளில் ஒளிந்து கொண்டிருக்கும் இருளை நான் ரசிக்கிறேன் ஜீவா...

கவிதைகளைப் புறமுதுகிடச் செய்யும் வசனமல்லவா இது!

கலைஞரிடம் உள்ள தீர்க்க சிந்தனை என்னை எப்போதும் வியக்கச் செய்கிறது. 1950-களில் தமிழ்நாட்டின் மக்கள்தொகை 3.1 கோடி. அதில் கற்றவர்களின் விகிதாசாரம் 20.8%. பாரதி காலத்தில் பாமரராய், விலங்குகளாய்க் கிடந்தவர்கள் - கலைஞரின் காலத்தில் பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருந்தார்கள் என்று சொல்லலாம். இந்தக் கூட்டத்துக்கு இலக்கணத்தின் அருந்தமிழும் இலக்கியத்தின் பெரும்பொருளும் புரியுமா என்றெல்லாம் கருதாமல், புரிந்துகொள்வார்கள் அல்லது புரிந்துகொள்ளட்டும் என்று அவர் எடுத்த இலக்கிய முடிவு அற்புதமானது!

"எகிப்தியப் பேரழகி கிளியோபாட்ரா தமிழ்நாட்டு முத்துக்களைச் சாராயத்தில் போட்டுக் குடித்தாளாம்" - இது 'பராசக்தி'.

"மிருக ஜாதியில் புலி மானைக் கொல்லுகிறது. மனித ஜாதியில் மான்

புலியைக் கொல்லுகிறது" – இது 'மருதநாட்டு இளவரசி'.

"வேலின் கூர்மையைச் சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக்கொண்டிருக்கின்றன!" – இது 'மனோகரா'.

"மனச்சாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது" – இது 'பூம்புகார்'.

"அவள் அழகை வர்ணிக்க ஆயிரம் நாவு படைத்த ஆதிசேசன்கூட கம்பனிடம் ஒன்றிரண்டு கடன் வாங்க வேண்டும்" – இது 'புதுமைப்பித்தன்'.

இப்படி கொட்டகைக்குள் கலைஞர் கொட்டிய கோமேதகங்கள் பலப் பல!

என் பார்வையில் திரைத் துறையில் கலைஞரின் தீராத சாதனை இதுதான். தமிழர் இருந்த பள்ளத்துக்குத் தமிழைத் தாழ்த்தாமல், தமிழ் இருந்த உயரத்துக்குத் தமிழரை உயர்த்தியது.

ஒரு குறிப்பிட்ட கால எல்லை வரை கலைத் துறை என்பது கழகத்தை வளர்க்கும் அரசியல் மேடையாகப் பயன்படுத்தப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிரமாக இருந்தபோது, கவிஞர் கண்ணதாசன் தான் எழுதிய ஒரு பாடலில் கழகத்தின் முன்னணி ஏடுகளைப் பட்டியலிட்டார். திராவிட இயக்கத்துக்கென்று 375 ஏடுகள் தோன்றி வளர்ந்ததாக ஒரு இதழியல் குறிப்பு சொல்கிறது.

அண்ணாவின் 'திராவிட நாடு', 'நம்நாடு', நெடுஞ்செழியனின் 'மன்றம்', கலைஞரின் 'முரசொலி', கண்ணதாசனின் 'தென்றல்' போன்றவை திராவிட இயக்கங்களின் லட்சியம் பரப்பிய இதழ்களில் சில. இந்த ஏடுகளையெல்லாம் தன் பாடலில் ஒரு சரணத்தில் நுழைத்தார் கண்ணதாசன்.

"மன்றம் மலரும் முரசொலி கேட்கும்
வளர்ந்திடும் நம்நாடு – இளம்
தென்றல் தவழும் தீந்தமிழ் கேட்கும்
திராவிடத் திருநாடு!"

ஆனால், 'சேரன் செங்குட்டுவன்' ஓரங்க நாடக வசனத்தில் கலைஞர் செய்த தொண்டு இயக்கத் தலைவர்களுக்கே கிரீடம் சூட்டியது. அண்ணா, நெடுஞ்செழியன்,

ஆசைத்தம்பி, பி.எஸ்.இளங்கோ, கண்ணதாசன், என்.எஸ்.கிருஷ்ணன், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை முதன் முதலில் அறிஞர் அண்ணா எழுதுவதற்குத் தன் தாளைத் தந்தவர் என்று கருதப்படுகிற அரங்கண்ணல், இத்தனை தலைவர்களையும் ஒரே பத்தி வசனத்தில் உள்ளடக்கிய சாகசத்தை கலைஞரின் தமிழ் நிகழ்த்தியது.

"சிங்கத் திருவிடமே உன்னை இகழ்ந்தார்கள், ஈடற்ற புலவனே இளங்கோ! ஆசைத்தம்பி! உன்னை இகழ்ந்தார்கள், நீதிக்கு உயிர்தந்த பாண்டியனே ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனே! உன்னை இகழ்ந்தார்கள், அரங்கின் அண்ணலே! உன்னை இகழ்ந்தார்கள், செந்தமிழ் வளங்குறையாச் சிங்க ஏறுகளே! அறிஞரே! கவிஞரே! கலைவாணரே! உம்மையெல்லாம் இகழ்ந்தார்கள். புறப்படுங்கள்! களத்திலே உங்கள் தலைகள் பறிபோகலாம். ஆனால், கனல் கக்கும் கண்களோடு அவை கொய்யப்படட்டும்!"

கலைஞரின் கலையும் – அரசியலும் இருப்புப் பாதையின் இணைகோடுகளாய் இயங்கின. படங்களில் நீதிமன்றக் காட்சிகளை நிறையப் புகுத்தினார். அவை வெறும் நீதிமன்றங்கள் அல்ல. தயாரிப்பாளர் செலவில் கலைஞர் தனக்கு அமைத்துக்கொண்ட சொற்பொழிவு மேடைகள். அந்தப் பாத்திரங்களின் பின்புலத்தில், தோள்களில் துண்டை உரசிப் பேசும் கலைஞரையே தமிழ்ச் சமூகம் கண்டு மகிழ்ந்தது. சுதந்திர இந்தியாவில் ஓர் ஊராட்சி ஒன்றியமாய் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு, நிதியிலும் நீதியிலும் புறக்கணிக்கப்பட்டு வந்ததால் 'வடக்கு வாழ்கிறது.. தெற்கு தேய்கிறது' என்ற முழக்கத்தை அண்ணா முன்வைத்தார்.

இதையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு தான் காஞ்சித் தலைவனில் கலைஞர் பாட்டெழுதுகிறார்:

"மகிமை கொண்ட மண்ணின் மீது எதிரிகளின் கால்கள்/மலர் பறிப்பதில்லையடா வீரர்களின் கைகள்"

'பராசக்தி' படத்தில் பிச்சைக்காரர்களுக்குப் பரிந்தெழுதிய அதே பேனாவில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்துக்குக் கையொப்பமிட்ட உரிமை கலைஞர் என்ற படைப்பாளிக்கும் போராளிக்கும் கிடைத்த வரலாற்றுப் பெருமையாகும். கல்வியிலும் – பொருளாதாரத்திலும் தமிழர்கள் தலையெடுப்பதற்கு முன்பு மானமுள்ள சமுதாயமாய் வாழ வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கங்களின் உயிர்த் துடிப்பாக இருந்தது. அதற்காகத்தான் பகுத்தறிவு என்ற தத்துவம் தலையெடுத்தது.

பெரியார் வழிவந்த மானமிகு தொண்டன் என்பதை மறக்காத அந்தக் கலைஞரைத் தமிழ்நாடு மறக்காது; தலைமுறை மறக்காது!

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக

ஆறு மாத பட்டயச் சான்றிதழ் படிப்புகள்

அறிமுகம்

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம், அமெரிக்காவில் உள்ள இண்டியான பகுதியில் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம் அமெரிக்க அரசின் அங்கீகாரம் பெற்று சர்வதேச இணையப் பல்கலைக் கழகமாக செயல்படுகிறது.

உலகநாடுகளில் உள்ள தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இந்த பல்கலைக்கழகத்தில் 2022-23 ஆம் கல்வியாண்டிற்கான ஆறுமாத பட்டயச் சான்றிதழ் படிப்புகள் இனிதே உதயமாகின்றன.

இச்சான்றிதழ் படிப்புகளுக்கான வகுப்புகள் இணையத்தின் வழியாக அந்தந்த துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்டு வருகின்ற ஜீலை மாதம் முதல் தொடங்க உள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டயம் பெற ஆர்வமுள்ள அனைவரையும் அன்போடு அழைக்கிறோம். பட்டயப்படிப்புகள் குறித்த விவரங்கள் கீழே...

பழங்குடியினரின் மொழியியல் மற்றும் பண்பாடு

(Diploma in tribals language & Culture)

சமூக பணி

(Diploma in Social work)

நாட்டிய கலாபூசனி

(Diploma in Naatiya Kalabhoosani)

தமிழ் இலக்கணமும் பயிற்சியும்

(Diploma in Tamil grammer & training)

தன்முனைக் கவிதைகள் பயிற்சியும் ஆய்வறிக்கையும்

(Diploma in Self Assertive verses, training & report)

தமிழ் மரபிலக்கணப் பாவலர் பட்டயச் சான்றிதழ்

(Diploma in Tamil Pavalar Genetics grammer)

அடிப்படை சித்த மருத்துவ அறிவுக்கான சான்றிதழ் படிப்பு

(Diploma in certificate course for integrative Sidha Medicine)
தலைமைத்துவத் தகுதிகளுக்கான சான்றிதழ் படிப்பு

(Diploma in Certificate Course for Leadership Qualities)

பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்புக்கான சான்றிதழ் படிப்பு

(Diploma in Certificate Course for Post Pregnancy Care)

மேலும், தகவல்களை, அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக (www.americamutamiluniversity.org) வலைத்தளத்தின் ஊடாக அறிந்து பயன் பெறலாம்.

தொடர்புக்கு - 9159698466, 9976025731.

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக் கழகம்

வேந்தர்	:	**முனைவர் தாழை இரா.உதயநேசன்**
துணைவேந்தர்	:	**டாக்டர் உ.ஆல்வின்**
பதிவாளர்	:	**முனைவர் மோ.பாட்டழகன்**
ஆலோசனைக் குழு	:	**கவிஞர் மதிப்புறு முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்** **கவிஞர் மதிப்புறு முனைவர் ஆரூர் தமிழ்நாடன்** **மதிப்புறு முனைவர் பாவலர் சரஸ்வதி பாஸ்கரன்** **எழுத்தாளர் சாம்பவி சங்கர்**
நிர்வாகக்குழு இயக்குநர்கள்	:	**முனைவர் ஜோ.சம்பத்குமார்** **முனைவர் ஜான் இளவரசு** **முனைவர் ஞா.விஜயகுமாரி** **டாக்டர் ஜெயராமன் பலராமன்** **டாக்டர் இரா.செந்தில்குமார்**
சட்ட ஆலோசகர்	:	**வழக்கறிஞர் எஸ்.பூங்குழலி**
அலுவலகச் செயலாளர்கள்	:	**எழுத்தாளர் எம்.மேரிமுத்து** **கவிஞர் ரேணுகா ஸ்டாலின்**

பதிவு எண் : **20220106155484З/9275709**

முகவரி : **6643,லோகஸ்ட் குரோவ் டிரைவ்,**
இண்டியானாபொலீஸ்,இண்டியானா 46237.
அமெரிக்கா.

தமிழக முகவரி : **எண்:10.முதல் தெரு, ஸ்ரீ ராமாபுரம்,**
ஆம்பூர் –635802, திருப்பத்தூர் மாவட்டம்

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

மற்றும்

குளோபல் கலைக்கூடம் இணைந்து நடத்திய

இணைப்பு விழா - 2022

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் குளோபல் கலைக்கூடம் இணைந்து ஏற்பாடு செய்த இணைப்பு விழா சீரும் சிறப்புமாக 04.06.22 அன்று இணையத்தினூடாக நிகழ்ந்தேறியது.

இந்நிகழ்வில் எட்டுக்கும் மேற்பட்ட உலக நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குறிப்பாக அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஐரோப்பா, இந்தியா, இலங்கை, சிட்னி, மெல்போர்ன், நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டனர்.

இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் இன்முகத்தோடு அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக இயக்குநர் முனைவர் ஜோ. சம்பத்குமார் வரவேற்றுப் பேசினார். அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழக வேந்தர் தமிழ்மாமணி முனைவர் தாழை இரா உதயநேசன் பல்கலைக்கழக நோக்கத்தையும் குளோபல் கலைக்கூடத் துடன் இணைந்து செயலாற்றும் பணிகளைப் பற்றியும் தலைமையுரையில் எடுத்தியம்பினார்.

பின்னர் கலைக்காவிரி கல்லூரி கலைக்கூட செயலாளர் டாக்டர் பெர்னார்ட் கில்ராய் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பு செய்தார். இந்தியாவிலிருந்து மதிப்புறு முனைவர் ஆரூர் தமிழ்நாடன், மதிப்புறு முனைவர் சரஸ்வதி பாஸ்கரன், மதிப்புறு முனைவர் கா.நா. கல்யாணசுந்தரம், பிரான்ஸிலிருந்து கௌசலா ஆனந்தராஜ், ஆஸ்திரேலியாவிலிருந்து சாந்தி ராஜேந்திரன், டாக்டர் ராதிகா சுர்ஜித், நார்வேயிலிருந்து லட்சுமி, பிரிட்டிஸ் தமிழ் மன்றத்திலிருந்து வசீகரன், இலங்கையிலிருந்து இசையாசிரியர் ஷர்மிளா ராமநாதன், இங்கிலாந்திலிருந்து திருமதி திருமகள் ஸ்ரீ பத்மநாபன் ஆகியோர்கள் சிறப்பான வாழ்த்துரை வழங்கி சிறப்பு செய்தனர். இவ்விழாவில் வரவேற்பு நடனமாக பிரான்ஸிலிருந்து ஆதிபராசக்தி கலைப் பள்ளியின் சார்பில் திருமதி மோகனா ரூபி தில்லை ரூபன் அரங்கேற்ற, அதனைத்தொடர்ந்து நியூஸிலாந்திலிருந்து மெலனி ஜெயக்குமார் நடனம், ஆஸ்திரேலியாவிலிருந்து சாந்தி ராஜேந்திரன் குழுவினர்களின் நடனம்,

சிதம்பரம் தமிழ் இசை நாட்டிய பள்ளி மற்றும் முத்தமிழ் ஆலயம் நடன நிகழ்ச்சி உமா மகேஸ்வரி சோமேஸ்வரன், இலங்கையிலிருந்து மலையக நுண்கலை பேட்டம் நடனம் ஸ்ரீதரி, கனடாவிலிருந்து ஷைலா கவிந்தன், திருக்கோணேஸ்வர நாதனாலயம் சந்திரவதனி விஜயசுந்தரம் மேலும் மறைக்கப்பட்ட நடனங்கள் சிறப்பாக அரங்கேறின.

இந்நிகழ்வை சிறப்பான முறையில் தொகுத்து வழங்கியவர்கள் குளோபல் கலைக்கூடத்தின் நிறுவனர் திரு எஸ். பிரதீப் குமார், சிந்துஜா ஆகியோர் ஆவர். முனைவர் ஆர். செந்தில்குமார் நன்றியுரை கூறி விழாவை நிறைவு செய்தார்.

- முனைவர் ஜோ. சம்பத்குமார்

இயக்குனர்

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

குழந்தையிடம்
வருகிறசொல் ஒருமலரின்
இதழிடம்
வருகிற அழகைப்போல.

கவிதையில்
வருகிற சொல்
காதலியிடம் வருகிற
காதலனைப்போல.

கதையில்
வருகிறசொல்
நண்பனிடம் வருகிற
நண்பனைப்போல.

கட்டுரையில்
வருகிற சொல்
ஆசானிடம் வருகிற
மாணவன்போல.

மேடைப்பேச்சில்
வருகிறசொல்
மனநலக் காப்பகத்திலிருந்து
தப்பித்துவந்த
நோயாளியைப்போல.

பட்டிமண்டபத்தில்
வருகிறசொல்
நீதிமன்றத்தில்
வாதங்களால் கொல்லப்பட்ட
நியாயம்போல.

திரைப்படத்தில்
வருகிறசொல்
பால்வினைநோய்க்குப்
பலியானவர்
பிணம்போ



ஈரோடு தமிழன்பன்

உலகத்தமிழர்களுக்காகவே

உருவாக்கப்பட்ட அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம், தனது 6 மாத பட்டயப் படிப்புகளை, ஜுலை முதல் சிறந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களைக் கொண்டு கோலாகலமாகத் தொடங்குகிறது. இன்றே உங்களுக்கு விருப்பமான பட்டய வகுப்புகளில் இணைவீர்.

படிக்கவும் பயனுறவும்....

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:

www.americamutamiluniversity.org